அகநானூற்றில் பெண்ணிய அணுகுமுறைகள்

து. சாந்தாலெட்சுமி
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர். பதிவு எண் : 2422223012001
முதுகலை மற்றும் தமிழாய்வு மையம்
ஏ.பி.சி மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி

நெறியாளர் முனைவர் அ. அமுதா
உதவிப் பேராசிரியர்
வ. உ. சிதம்பரம் கல்லூரி, தூத்துக்குடி

முன்னுரை

சங்க இலக்கியங்கள் தமிழ் மக்களின் வாழ்க்கை முறை, கலாச்சாரம் மற்றும் சமூக அமைப்பை விவரிக்கிறது. சங்க இலக்கியங்களில் பெண்கள் முக்கியமான கதாபாத்திரங்களாக இடம் பெற்றிருக்கிறார்கள். அவர்களின் உணர்வுகள், எண்ணங்கள், செயல்கள் என அனைத்தும் அழகாக பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. சங்க இலக்கிய நூல்களில் ஒன்றான அகநானூற்றில் பெண்களின் அணுகுமுறைகள் குறித்து, ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

பெண்ணிய அணுகுமுறைகள்

சங்க இலக்கியங்களில் பெண்ணிய அணுகுமுறைகள் பெண்களின் உணர்வுகள், உரிமை, சமூகப்பங்கு மற்றும் ஆளுமையை மையமாகக் கொண்டு அமைகின்றன. காதல், கற்பு, காதல் வயப்படல், தலைவனின் பிரிவைத் தாங்குதல், உடன்போக்கு, சமூகக் கட்டுப்பாடுகள், போர்ச் சூழலில் பெண்களின் நிலை மற்றும் பெண்பாற் புலவர்களின் பங்களிப்பு போன்றவை பெண்ணியத் திறனாய்வில் முக்கிய அணுகு முறைகளாக ஆராயப்படுகின்றன.

அகப்பொருள் அணுகுமுறை

சங்க இலக்கியத்தில் அகப்பொருள் பாடல்கள் பெண்களின் உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. காதலில் தலைவியின் உணர்வுகள், காதலுக்காக வீட்டை விட்டு வெளியேறுதல் ஆகியவை பெண்களின் உரிமையையும் விருப்பத்தையும் வலியுறுத்துகின்றன.

தலைவனின் பிரிவு தாங்காமை

தலைவியின் கவலை பொருளீட்ட சென்ற தலைவனை நினைத்து வருத்தம் கொள்வதும், அவன் செல்கின்ற பாதை அதிக வெப்பம் உடையதாக இருப்பதாலும், நம்மை பிரிய மாட்டேன் என்று கூறியவர் இன்று பொருளீட்டுவதற்காக நம்மை பிரிந்து சென்று விட்டாரே, என்று தலைவனின் பிரிவை தாங்காமல் தோழியிடம் கூறும் பாலை திணைப்பாடல்.

கல் போல் பிரியலம் என்ற சொல்தாம்
மறந்தனர் கொல்லோ -தோழி! - சிறந்த
வேய் மருள் பணைத் தோள் நெகிழ, சேய் நாட்டுப்
பொலங்கல வெறுக்கை (அகம் 1 : 6-9)

தோழியின் அச்சம்

களவின்பத்தையே பெரிதும் விரும்பி வருகின்ற தலைவன், தன் தலைவியை மணந்து கொள்ளாமல் சென்று விடுவானோ என்ற அச்சத்தில், வேற்றார் மணந்து செல்லும் முன்பே தலைவியை விரைந்து மணந்து கொள்ளுமாறு அவனிடம் கூறும் குறிஞ்சி திணைப் பாடலில், தலைவியின் மீதுள்ள அன்பும், தலைவனிடத்தில் கூறும்

செய்தியும் தோழியின் நல்ல உள்ளத்தை வெளிப்படுத்துகிறது.

மனைவாழ்வின் ஊடல்

இல்லற வாழ்வின் அன்பு நெறிகள் இரண்டு. ஒன்று ஊடல் மற்றொன்று கூடல். தலைவன் பரத்தையுடன் நீராடி அயர்ந்து, மீண்டும் தன் இல்லத்திற்கு வந்து தலைவியை பாராட்டி பேசுகின்றான். பரத்தையுடன் நீராடிய செயலை தலைவி அறிந்திருந்ததால் அவனுடன் ஊடல் கொள்கிறாள் என்பதை உணர்த்தும் பாடல்.

கழை நிலை பெறாஅக் காவிரி நீத்தம்
குழை மாண் ஒள் இழை நீ வெய்யோளொடு
வேழ வெண் புணை தழீஇ, புழியர்
கயம் நாடு யானையின் முகன் அமர்ந்தா அங்கு,
ஏந்து எழில் ஆகத்துப் புந்தார் குழைய
நெருநல் ஆடினை புனலே இன்று வந்து
(அகம் 6 : 6-11)

தோழியின் உள்ளம்

ஒருவர் துன்பத்தில் இருக்கும் பொழுது அவருக்கு நல்ல செய்திகளைக் கூறி அத்துன்பத்திலிருந்து மீட்டு கொண்டு வரும் பண்பு சிறந்தது. இலக்கியங்களில் தலைவி கவலை கொண்டிருந்த நேரமெல்லாம் தலைவியை ஆற்றுவித்தவள் தோழி. தலைவியின் கவலையை எவ்வாறு ஆற்றுப்படுத்துகிறாள் என்பதை விளக்கும் பாடல்

குரங்கு உளைப் பொலிந்த கொய்சுவற் புரவி,
நரம்பு ஆர்த்தன்ன, வாங்கு வள்பு அரிய,
புத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாது உண் பறவை பேதுறல் அஞ்சி,
மணி நா ஆர்த்த மாண் வினைத் தேரன்,
உவக்காண் தோன்றும் - குறும் பொறை நாடன்,
கறங்கு இசை விழவின் உறந்தைக் குணாது,
நெடும் பெருங் குன்றத்து அமன்ற காந்தட்
போது அவிழ் அலரின் நாறும் -
ஆய் தொடி அரிவை !- நின் மாண் நலம் பட
படர்ந்தே. (அகம் 4 : 8-17)

செவிலித்தாயின் ஆற்றாமை

தலைவனுடன் உடன்போக்கு சென்ற தலைவியைத் தேடிச் சுரத்தினிடையே செல்லும் செவிலித்தாய், தன் மகளை எப்படியும் உடன்போக்கினின்றும் மீட்டு அழைத்து வந்துவிடலாம் என்ற நோக்கில் சென்றவள், இடைச்சுரத்தின் கண்ட பெண்மானிடம் தன் ஆற்றாமையை புலப்படுத்தி கூறும் பாலைத் திணை பாடல்

முலை முகம்செய்தன முள் எயிறு இலங்கின
தலை முடிசான்ற தண் தழை உடையை
அலமரல் ஆயமோடு யாங்கணும் படா அல்
மூப்புடை முது பதி தாக்கு அணங்கு உடைய
காப்பும் புண்டின் கடையும் போகலை
பேதை அல்லை மேதை அம் குறுமகள்
பெதும்பைப் பருவத்து ஒதுங்கினை புறத்து
(அகம் 7 : 1-7)

உடன்போக்கு

தலைவியின் காதல் செவிலித்தாய்கு தெரிந்துவிட்டதால் இனி வேற்றாருக்கு தன்னைமணம்முடித்துகொடுத்துவிடுவார்கள் என அஞ்சி, தலைவி வீட்டிலுள்ள அரிய காவலை கடந்து வீட்டை விட்டுச் சென்று தலைவனோடு உடன் போக்குச் சென்றாள் என்பதை

ஒண் சுடர் நல் இல் அருங் கடி நீவி,
தன் சிதைவு அறிதல் அஞ்சி இன் சிலை
ஏறுடை இனத்த, நாறு உயிர் நவ்வி
வலை காண் பிணையின் போகி, ஈங்கு ஓர்
தொலைவு இல் வெள் வேல் வீடலை யொடு என் மகள்
இச்சுரம் படர்தந்தோளே (அகம் 7 : 8-13)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

தலைவியின் கவலை

களவொழுக்கத்தில் ஈடுபட்ட தலைவன் மணந்து செல்வதில் ஆர்வமின்றி இருக்கிறான். அதனை உணர்ந்த தலைவி, இரவுக் குறியிடத்து தன் அருகே வந்தவனின் வரவு அறியாதவள் போன்று, தோழியிடம் தன் வருத்தத்தை அவன் கேட்குமாறு கூறிய செய்தி அகநானூற்றில் கூறப்பட்டுள்ளது

ஈ.யற் புற்றத்து ஈ.ரம் புறத்து இறுத்த
குரும்பி வல்சிப் பெருங் கை ஏற்றை
தூங்கு தோல் துதிய வள் உகிர் கதுவலின்
பாம்பு மதன் அழியும் பானாட் கங்குலும்
அரிய அல்ல மன் இருளை (அகம் 8 : 1-5)

தோழியின் செயல்

தலைவன் தலைவியை மணந்து செல்லும் கருத்தின்றி நாளும் பகற்குறியிடத்தே வந்து களவொழுக்கமே ஒழுகினான். தலைவியை மணக்க செய்யக் கருதிய தோழி, பெரும தலைவி தன்தாய்தந்தையரால் இச்செறிக்கப்பட்டாள், ஆதலின் பகலில் வராதே என்றாள். அது கேட்ட தலைவன் சில நாள் இரவுக் குறிக்கண் வருவேன். பின்னர் மணந்து செல்வேன் என்று இரவுக்குறி வேண்டிய தலைவனை தோழி இரவுக் குறியும் மறுத்துத் தலைவியை மணந்து செல்லுமாறு வற்புறுத்திய பாடல்

மழை படு சிலம்பில் கழைபட பெயரும்
நல் வரை நாட நீ வரின்
மெல்லியல் ஒரும் தான் வாழலளே
(அகம் 12 : 12-14)

நற்றாயின் வருத்தம்

களவொழுக்கத்தில் இடையுறு மிகுந்தமையால், தலைவி தன் உளங்கொண்ட தலைவனுடன், தோழியரும் தாயும் தனிமையில் வருந்துமாறு, செறிந்த காப்பினைக் கடந்து உடன்போக்கு சென்றுவிட்டதை அறிந்த நற்றாய் வருந்திக் கூறும் பாடல்

அறிந்த மாக்கட்டு ஆகுகதில்ல
தோழிமாரும் யானும் புலம்ப,
சூழி யானைச் சுடர்ப் புண் நன்னன்
பாழி .அன்ன கடியுடை வியல் நகர்ச்
செறிந்த காப்பு இகந்து, அவனொடு போகி,
(அகம் 15 : 9-12)

தோழியின் மகிழ்ச்சி

மழைவளம்தேவைப்படுகின்றது. மழையே பெய்யவில்லை. ஒருநாள் இரவு நல்ல மழைபெய்து குளங்களெல்லாம் நிரம்பி வழிகின்றன. ஊர்மக்களெல்லாம் மிகுதியாக மகிழ்ந்தனர். அந்த ஊர் மக்களின் மகிழ்ச்சியைத் தோழி அடைந்ததாகக் கூறுகிறாள். காரணம் தலைவன், தலைவியை மணந்து செல்வதற்காக வருகின்றான் என்ற செய்தி அறிந்து, தலைவிக்கு உணர்த்துபவளாய்த் தன் மகிழ்ச்சி வெளிப்படக் கூறினாள் என்பதை உணர்த்தும் பாடல்.

என்றூழ் வியன் குளம் நிறைய வீசி
பெரும் பெயல் பொழிந்த ஏம வைகறை
பல்லோர் உவந்த உவகை எல்லாம்
என்னுள் பெய்தந்தற்றே (அகம் 42 : 9-12)

காதலை சொல்லும் அணுகுமுறைகள்

களவொழுக்கத்தில் பல்வேறு இடையுர்கள் காரணமாக தலைவி தலைவனைக் காணாது உடல் மெலிந்து வருத்தமுற்று இருந்தாள். அவளது உடல் வேறுபாட்டிற்கான காரணத்தை செவிலித்தாய் தோழியிடம் கேட்க அவள் தலைவியின் காதலை வெளிப்படையாக கூறாமல் குறிப்பால் உணர்த்துகிறாள்

ஒரு நாள் தோழியரேரோடு வேங்கையின் புக்களைப் பறிக்க சென்றோம். அப்பொழுது புலி புலி என்று ஆரவாரம் கேட்டது. நாங்கள் பயந்து நின்றுக் கொண்டிருந்தோம். அப்பொழுது, மலைநாட்டுக்குரிய தலைவன் வந்தான். புலி போன வழியை கேட்டான். நாங்கள் அவனைக் கண்டு நாணி ஒருவர் பின் ஒருவராக மறைந்து நின்றோம். அப்பொழுது அவன் நின் மகளது மையுண்ட கண்களையே எதிர்மறுத்து பலமுறை பார்த்துச் சென்றான். அப்பொழுது, நின் மகள் அவன் சென்ற திசையை நோக்கி, இவன் ஓர் ஆடவனே என்றுக் கூறினாள். இது தவிர வேறு காரணம் தெரியாது என தலைவியின் காதலை செவிலித்தாய் அறியுமாறு கூறிய பாடல்

பரி முடுகு தவிர்த்த தேரன், எதிர் மறுத்து
நின் மகள் உண்கண் பல் மாண் நோக்கிச்
சென்றோன் மன்ற அக் குன்று கிழவோனே
பகல் மாய் அந்திப் படுசுடர் அமையத்து
அவன் மறை தேஎம் நோக்கி மற்று இவன்
மகனே தோழி என்றனள் (அகம் 48: 20-25)

காதலை தோழிக்கு உணர்த்துதல்

தலைவி, தலைவன் மீது கொண்ட காதலை, தோழிக்கு எப்படி உணர்த்துகிறாள் என்பதை கூறும் பாடல்

உருவ வல் விற் பற்றி அம்பு தெரிந்து
செருச் செய் யானை செல் நெறி வினாஅய்
புலர் குரல் ஏனற் புழையுடை ஒரு சிறை
மலர் தார் மார்பன் நின்றோற் கண்டோர்
பலர் தில் வாழி தோழி அவருள்
ஆர் இருட் கங்குல் அணையொடு பொருந்தி
ஓர் யான் ஆகுவது எவன் கொல்
நீர் வார் கண்ணொடு நெகிழ் தோளேனே?

(அகம் 82 : 11-18)

என்ற பாடலில், மலைநாட்டு தலைவன் கையிலே வில் அம்பை வைத்துக் கொண்டு, தன்னால் போர் செய்து அம்பு எய்யப் பெற்ற யானை சென்ற வழியை கேட்டு, நம் தினைப் புனத்தின் ஒரு பக்கத்தில் வந்து நின்றான். அங்கு நின்றவனை பலரும் கண்டார்கள். அவருள்ளும் அரிய இருள் செறிந்த இரவில் படுக்கையில் பொருந்திக் கிடந்து, கண்களில் நீர் வர, நான் ஒருத்தி மட்டுமே மெலிந்த தோள்களை உடையவளாயினேன். அதற்குக் காரணம் யாதோ? என்று தன் காதலை தோழி அறியும் வண்ணம் வினவுகிறாள் தலைவி.

பெண் கேட்டு வருதல்

தலைவன், தலைவியை மணந்து கொள்வதற்கு, தம் உற்றார் உறவினரோடு வருதலை அறிந்த தோழி, தன் தலைவியிடம் கூறி மகிழ்ந்ததாக கூறப்படும் பாடல்

கண்இனிது படுக்கும் நல்மலை நாடனொடு
உணர்ந்தனை புணர்ந்த நீயும், நின்தோட்
பணைக்கவின் அழியாது துணைப்புணர்ந்து,

என்றும்

தவல்இல் உலகத்து உறைஇயரோ-தோழி-
எல்லையும் இரவும் என்னாது, கல்லெனக்
கொண்டல் வான்மழை பொழிந்த வைகறைத்
தண்பனி அற்சிரம் தமியோர்க்கு அரிது

(அகம் 178 : 13-19)

முடிவுரை

சங்க கால பெண்களின் வாழ்க்கை முறையில் ஏற்பட்ட சிக்கல்கள், அவர்களின் உணர்வுகள் மற்றும் அணுகுமுறைகள், தோழி தலைவியிடம் கொண்டுள்ள அன்பு, தலைவனை திருமணத்திற்கு அறிவுறுத்தும் அணுகுமுறை, தலைவி தன் காதலை தோழிக்கு உணர்த்தும் விதம், தலைவியின் காதலை செவிலிக்கு உணர்த்தும் இடங்கள், உடன்போக்கு சென்ற தலைவியை நினைத்து வருந்தும் நற்றாய் என பெண்களின் அணுகு முறைகள் அகநானூற்றில் மிகுதியாக கூறப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

துணை நூற்பட்டியல்

1. ரா.செயபால்,அகநானூறு நியு செஞ்சுரி புக் கவுஸ், சென்னை. முதல் பதிப்பு 2004.
2. ச.வே. சுப்பிரமணியன், தமிழ் இலக்கிய வரலாறு, மணிவாசகர் பதிப்பகம். முதல் பதிப்பு சூலை 2003
3. பாக்யமேரி, தமிழ் இலக்கிய வரலாறு, நியு செஞ்சுரி புக் கவுஸ், சென்னை. முதல் பதிப்பு மே 2013